Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 24 2024

புதன்கிழமை ஜனவரி 24, 2024 | ஒளி: 10 கதிர் 178 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## மின்சார கட்டண திருத்தம் பிந்தும்

மின்சாரக் கட்டணங்கள் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் திருத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ, செவ்வாய்க்கிழமை (23) காலை தெரிவித்தார். மின்சாரக் கட்டணத்தை திருத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் இருப்பதாகத் தெரிவித்த மஞ்சுள பெர்னாண்டோ,

தொடர்ச்சி P2

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம்

## “முடக்கும் முயற்சி”

இந்த ஆண்டு முக்கிய தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில், அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை முடக்குவதற்காகவே நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ( 23) இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் அடிப்படை நோக்கத்துக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தொடர்ச்சி P2



**“அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கும் தரப்பினரை அடக்குவதற்காகவே நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் முன்வைக்கப் பட்டுள்ளது...**

## “இவற்றுக்கு மட்டும்”


நிகழ்நிலைபாதுகாப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், எதிர்வரும் அமைச்சரவையில் கலந்துரையாடி சட்டமூலத்தில் புதிய யோசனைகள் சிலவற்றை உள்ளடக்குவோம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) நடைபெற்ற நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

நிகழ்நிலை காப்பு தொடர்பான சட்டமூலம் என்னால் கடந்த ஒக்டோபர் மாதத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

**“இணையங்கள் ஊடான குற்றங்கள் தொடர்பாக 8000க்கும் அதிகமான முறைப்பாடுகள் உள்ளன. பாலியல் இடையூறுகள் தொடர்பில் 669 முறைப்பாடுகளும், நிர்வாண புகைப்படங்கள் தொடர்பில் 506 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன...**



## “கத்தியை போன்றது”

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் கத்தியை போன்றது. அதன்மூலம் கழுத்தை வெட்டவும் முடியும். பட்டர் பூசவும் முடியும், இதனால் இந்த சட்டமூலம் அச்சுறுத்தலானது என்று தேசிய சுதந்திர முன்னணி தலைவரும் எம்.பியுமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) நடைபெற்ற நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் கத்தியை போன்றது. அதன்மூலம் ஒருவரின் கழுத்தை வெட்டவும் முடியும். பட்டர் பூசவும் முடியும் என்று ஆளும் தரப்பில் கூறியுள்ளனர். இதனால் இது அச்சுறுத்தலானது.

தொடர்ச்சி P2



**“போலிக் கணக்குகளை சமூக வலைத்தளங்களில் நடத்திச் செல்வது தவறு என்பதை விட, அந்த கணக்கை இன்னுமொருவருக்கு எதிராக சேறு பூசுவதற்காகப் பயன்படுத்துவதே தவறு...**

## ‘DAT’ நிறுத்தியதை எதிர்த்து பணிப்புறக்கணிப்பு

**முன்மொழிவுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்திருந்தது. கொடுப்பனவை திறைசேரி இடைநிறுத்தியுள்ளது**

மருத்துவர்களின் DAT கொடுப்பனவை இரட்டிப்பாக்கி, மாதமொன்றுக்கு 70,000 ரூபாய் வழங்குவதாக அறிவித்துவிட்டு, அந்த கொடுப்பனவை வழங்குவதை இடைநிறுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளமை எதிர்த்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை புதன்கிழமை (24) முதல் ஆரம்பிக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘PTA’க்கு எதிராக 6 மனுக்கள் தாக்கல்

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு Prevention of Terrorism Act (PTA) க்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஆறு மனுக்களும், நுண்கடன் மற்றும் கடன் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை சட்டமூலத்துக்கு எதிராக இரு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2



## “கருத்துச் சுதந்திர தணிக்கைச் சட்டத்தை கிழிப்போம்”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) சமர்ப்பிக்கப்பட்ட, நிகழ்நிலை காப்புச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாராளுமன்றத்துக்குச் செல்லும் சுற்று வட்டத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

‘சமூகத்தை ஊமையாக்கும் சமூகவலைத்தள சட்டத்தை ரத்து செய்’ என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ‘திருடர்களைக் காக்கும் ரணில், உண்மையைத் தடுப்பார், கருத்துச் சுதந்திர தணிக்கைச் சட்டத்தைக் கிழிப்போம்” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




## தமிழ் கைதியை ஆற்றுக்கு இழுத்துச் சென்ற முதலை

தமிழ் கைதியொருவர் முதலை தாக்குதலுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதி ஒருவரே முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி முதலையால் இழுத்துச் செல்லப்பட்டபோதும் பெரும் முயற்சியையடுத்து, காப்பாற்றப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 34 வயதுடைய



தொடர்ச்சி P2

## ஊடகவியலாளர்களுக்கு உபகார சலுகை பெகேஜ்



மொபிடெல் நிறுவனத்தினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் உபகார சலுகை பெகேஜை அரசாங்க தகவல் திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணித்துள்ளார். இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.



## இந்தியா – இலங்கை இடையே கடல் பாலம் அமைக்க திட்டம்

இந்தியா - இலங்கை இடையே பாலம் அமைக்கும் பணியை மத்திய அரசு தொடங்க உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என இந்தியச் செய்தி தெரிவிக்கின்றது.

சுற்றுலாவையும், பொருளாதாரத்தையும் ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்தவகையில், மற்றொரு முக்கிய முடிவை இந்திய அரசு எடுத்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தனுஷ்கோடி மற்றும் இலங்கையின் தலைமன்னாரை இணைக்கும்

தொடர்ச்சி P2

**“மும்பை – நவி மும்பை இடையே அமைக்கப்பட்டுள்ள 21.8 கிலோமீட்டர் நீளம் கொண்ட அடல் சேது பாலம் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னரே இலங்கை–இந்தியப் பாலம் குறித்து ஆராயப்பட்டுள்ளது...**

### கல்முனை மாநகர சபையில்

## சோலை வரிகளுக்கு 10 சதவீதம் கழிவு

கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கான சோலை வரிகளை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு 10 சதவீதம் கழிவு வழங்கப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

ஆகையினால் நடப்பாண்டுக்கான தமது சோலை வரிகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக மொத்தமாக செலுத்தி,



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம்

## "முடக்கும் முயற்சி"

இந்த சட்டமூலத்தின் ஊடாக நியமிக்கப்படும் ஆணைக்குழு சுயாதீனமானதல்ல, அரசாங்கத்தின் இயந்திரமாகவே இந்த ஆணைக்குழு செயற்படும் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

அரசாங்கத்துக்குச் சாதகமான விடயங்களை சமூகமயப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கத்துக்கு ஆதரவானவர்கள் தற்போது முன்னெடுத்துள்ளார்கள். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் அண்மையில் என்னைச் சந்தித்தார். இணக்கமான கலந்துரையாடல் இடம்பெற்றது.இலங்கையின் அரசியல் நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடினோம்.

மக்கள் விடுதலை முன்னணி தொடர்பில் அச்சநிலை காணப்படுகிறது.ஆகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஒன்றிணைத்து மக்கள் விடுதலை முன்னணியைத் தோற்கடிக்க வேண்டும் என தூதுவர் என்னிடம் குறிப்பிட்டதாகச் செய்திகள் வெளியாகின. இது முற்றிலும் பொய்யானது.இவ்வாறான போலி அரசியல் செய்திகள் எதிர்வரும் காலங்களில் வெளியாகலாம்.

இது தேர்தல் ஆண்டு, அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களைக் தெரிவிக்கும் தரப்பினரை அடக்கும் தேவை அரசாங்கத்துக்கு உண்டு. இதன் காரணமாகவே நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் முன்வைக்கப்பட்டுள்ளது. மறுபுறம் ஒளி மற்றும் ஒலிபரப்பு கண்காணிப்பு ஆணைக்குழு சட்டத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டு மக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை முடக்கித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றார்.



## "கத்தியை போன்றது"



இதேவேளை, போலிக் கணக்குகளை சமூக வலைத்தளங்களில் நடத்திச் செல்வது தவறு என்பதை விட, அந்த கணக்கை இன்னுமொருவருக்கு எதிராக சேறு பூசுவதற்காகப் பயன்படுத்துவதே தவறு. நான் ஜே.வி.பியில் செயற்பாட்டாளராக இருந்த பின்னர் ஊடகத்துறையில் பணியாற்றினேன். அப்போது நான் புனைப்பெயர்களிலேயே கட்டுரைகளை எழுதி வந்தேன். ஆனால், நான் அந்த பெயர்களில் இருந்து எவருக்கு எதிராகவும் தவறாக எழுதவில்லை.

எவ்வாறாயினும் இப்போது சமூக வலைத்தளங்கள் பலமாக இருக்கின்றன. அரசாங்கத்தின் பயணத் திட்டமும் நல்ல மனதுடன் அல்ல. இதனால் அந்த பயணத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவர்களை ஒடுக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். அந்த வகையிலேயே இந்த சட்டமூலத்தை கொண்டுவருவதாகவே நாங்கள் கருதுகின்றோம். இதனாலேயே சட்டமூலத்திற்கு நாங்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றோம் என்றார்.

## "இவற்றுக்கு மட்டும்"

அதன்பின்னர் பல்வேறு நிறுவனங்களுடன் கடந்த மூன்று மாதங்களாக இது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி இணக்கப்பாடுகளுக்கு வந்தோம்.

அத்துடன் உயர்நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பிலும் கலந்துரையாடி இணக்கப்பாடுகளை மேற்கொண்டோம். அதேபோன்று எனது அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் சட்டப்பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட குழுவினர் சிங்கப்பூருக்குச் சென்று இது தொடர்பில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் தமது யோசனைகளை ஜனவரி 8ஆம் திகதி முன்வைத்தனர்.

இதன்படி அனைத்து யோசனைகள் தொடர்பிலும் ஆராய்ந்து இணங்கக்கூடியவற்றுக்கு இணக்கப்பாடுகளை மேற்கொண்டோம். இதன்பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கமைய அந்த யோசனைகளை சட்டமூலத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தோம். இந்த சட்டமூலம் தொடர்பில் கடந்த நாட்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடிச் செய்ய முடிந்த யோசனைகளுடன் உயர்நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன் சட்டமூலத்தை முன்வைத்து வாக்கெடுப்பு நடைபெற்ற பின்னர் புதிய யோசனைகளை அடுத்த அமைச்சரவையில் முன்வைப்பதாகக் கூறியுள்ளேன்.

அதன்பின்னர் அது வர்த்தமானியில் அறிவிக்கப்படும். இதற்கு எவரும் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று நினைக்கவில்லை. இது அனைத்து தரப்பினருடனும் இணங்கிய யோசனையாகவே இருக்கும். இதன்படி புதிய திருத்தங்களாக இந்த சட்டமூலத்தில் உள்ளடக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த சட்டமூலம் தொடர்பில் சமூகவலைத்தளங்கள் ஊடாக தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. ஆனால் இந்த சட்டமூலம் ஊடாக சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுதல், வன்முறைகளைத் தோற்றுவிக்கும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத்தல், சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், மத மற்றும் நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்தல், தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிரான வகையிலேயே இது கொண்டுவரப்படவுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் இந்த நாட்டில் பெருமளவில் நடக்கின்றன.

2023ஆம் ஆண்டில் இணையங்கள் ஊடான குற்றங்கள் தொடர்பாக 8000க்கும் அதிகமான முறைப்பாடுகள் உள்ளன. பாலியல் இடையூறுகள் தொடர்பில் 669 முறைப்பாடுகளும், நிர்வாண புகைப்படங்கள் தொடர்பில் 506 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

ஆனால், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான நிர்வாண படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# மின்சார கட்டண திருத்தம் பிந்தும்

அதற்கிணங்க மக்கள் கலந்தாய்வு செவ்வாய்க்கிழமை (23) முதல் ஆரம்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் உள்ள மின்சார பாவனையாளர்கள் ஜனவரி மாத மின் கட்டணத்தில் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சோலை வரிகளுக்கு 10 சதவீதம் கழிவு

### அலுவலக நாட்களில் இதனை இலகுவாக செலுத்த முடியும்



இந்த சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையில் ஒரே கூரையின் கீழ் சேவைகளை வழங்கும் முகப்பு அலுவலக கரும பீடங்களில் அலுவலக நாட்களில் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை கால தாமதமின்றி இலகுவாக இதனை செலுத்த முடியும் என மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ் கைதியை ஆற்றுக்கு இழுத்துச் சென்ற முதலை

தமிழ் கைதி ஒருவர் முதலையால் தாக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைப் பகுதியில் உள்ள மல்வத்து ஓயாவை அண்மித்த பகுதியில் குறித்த கைதியும் இன்னும் சில கைதிகளும், பயிர்ச் செய்கைகளில் செவ்வாய்க்கிழமை (23) ஈடுபட்டிருந்தபோது, மூங்கில் புதருக்குள் மறைந்திருந்த முதலை ஒன்று கைதியின் காலைப் பிடித்து மல்வத்து ஓயாவுக்கு இழுத்துச் சென்றதாகச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். .

முதலையின் தாக்குதலுக்கு உள்ளாகி, ஒரு கை, கால் மற்றும் கழுத்து பகுதியில் காயமடைந்து கைதி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் 11ஆவது வார்டில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மல் அத்து ஓயாவில் நீராடச் சென்ற கைதியை முதலை தாக்கியதாகக் கிடைத்த தகவலை மறுத்த சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், பயிர்ச்செய்கையில் திங்கட்கிழமை (22) மாலை ஈடுபட்டிருந்த போதே இந்த முதலைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்றார்.

# 'PTA' க்கு எதிராக 6 மனுக்கள் தாக்கல்

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (23) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின் போதே இந்த அறிவிப்பை விடுத்த சபாநாயகர் மேலும் கூறுகையில்,

அரசியலமைப்பின் 121 (1) சரத்துக்கு அமைய உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன

அதேபோல் நுண்கடன் மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டமூலத்துக்கு எதிராக அரசியலமைப்பின் 121 (1) சரத்துக்கு அமைய உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு அதன் பிரதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றார்.

# இந்தியா – இலங்கை இடையே கடல் பாலம் அமைக்க திட்டம்

வகையில் கடலின் குறுக்கே 23 கிலோ மீட்டர் நீளமுள்ள பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு குறித்து இந்திய அரசு ஆய்வு மேற்கொள்ள உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்ததாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேலும் 23 கி.மீ நீளமுள்ள புதிய ராமர் சேது பாலம், இந்தியாவின் தனுஷ்கோடியை இலங்கையின் பாக் ஜலசந்தி வழியாக இணைக்கும் சேது சமுத்திரம் திட்டம், போக்குவரத்துச் செலவை 50 சதவீதம் குறைத்து, இலங்கைத் தீவை இணைக்க உதவும். இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது. இது தொடர்பான ஆய்வுகள் விரைவில் தொடங்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மும்பை - நவி மும்பை இடையே அமைக்கப்பட்டுள்ள 21.8 கிலோமீட்டர் நீளம் கொண்ட அடல் சேது பாலம் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னரே இலங்கை-இந்தியப் பாலம் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'DAT' நிறுத்தியதை எதிர்த்து பணிப்புறக்கணிப்பு

DAT கொடுப்பனவை இரட்டிப்பாக்க ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு அரசாங்கம் சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இடையூறு (Disturbance) கிடைக்கும் (Availability) மற்றும் போக்குவரத்து (Transport) ஆகிய கொடுப்பனவை இரட்டிப்பாக்க ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு அரசாங்கம் சமீபத்தில் ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், அக்கொடுப்பனவை திறைசேரி இடைநிறுத்தியுள்ளது.

# வீட்டில் வசிக்கும் வாரிசுகளுக்கு மட்டுமே வீட்டின் உரிமை

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட வரவு -செலவுத் திட்ட முன்மொழிவின் கீழ் 50,000 வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் இந்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தில், வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் போது வீட்டு உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய நொத்தாரிசு கட்டணம், முத்திரைக் கட்டணம் மற்றும் பிற வரிகளுக்குச் செலவிடப்படும் தொகை திறைசேரியால் ஏற்கப்படும் என்று பரிந்துரைத்துள்ளது.

மேலும், இந்த வீடுகளின் முழு உரிமையை மாற்றும் போது அசல் பயனாளி இறந்திருந்தால், அந்த வீட்டில் தற்போது வசிக்கும் அவரது வாரிசுகளுக்கு மட்டுமே வீடுகளின் முழு உரிமையும் வழங்கப்பட வேண்டும் என்றும் இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் அவதானிப்புகளுக்காகவே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், நாளை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

பல்வேறு நகரத் திட்டங்களின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்படும் வீடுகளில் இருந்து மாதந்தோறும் ரூ.3000 வசூலிக்கப்படுகிறது. வாடகைப் பணம் வசூலிப்பதை முற்றாக நிறுத்துவதற்கு இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்மொழிந்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுமார் 70 சதவீதமான மக்களுக்குக் காணி மற்றும் வீட்டு உரிமைப்பத்திரங்களை சட்டரீதியாக வழங்கி காணி மற்றும் வீடுகளின் வாரிசுகளாக்குவது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு இணங்க இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நகர வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் வாடகை வசூலை இடைநிறுத்தி, அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளின் உரிமையை சட்டப்பூர்வமாக ஒப்படைத்தலாகும்.

நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் சட்ட நிலைகள் தொடர்பில், குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீட்டுப் பத்திரங்களை வழங்குவது தொடர்பாக, சட்டமா அதிபருடன் ஏற்கனவே கலந்துரையாடி தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு சட்டபூர்வ உறுதிப்பத்திரங்களை வழங்கியதன் பின்னர், குடியிருப்பாளர்களின் பிரதிநிதித்துவத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டு ஆதன முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினால் இந்த வீடுகளின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும் என அமைச்சரவைப் பத்திரம் மேலும் தெரிவிக்கிறது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம்

# டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் பெரும்பாலான சரத்துக்கள் நாட்டு மக்களை அச்சமூட்டுகின்றன. பிறிதொரு பெயரில் முகப்பு புத்தக கணக்குகளை பாவிப்பது ஐந்து வருட கால சிறைத் தண்டனைக்குரிய குற்றம்என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையில் சேவையில் உள்ள சமூக ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக பாரிய நெருக்கடிகள் ஏற்படும். இதனால் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இரசாயன உரங்களை அவசரமாகத் தடை செய்து, சேதன பசளை திட்டத்தைக் கடந்த அரசாங்கம் அவசரமாக செயற்படுத்தியது, இறுதியில் முழு நாடும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. விவசாயமே அழிந்தது. உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலமும் அந்த வகையில் தான் முறையான வழிமுறைகள் ஏதும் இல்லாமல் அவசர அவசரமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் 57 சரத்துக்களில் 34 சரத்துகள் அரசியலமைப்புக்கு முரண் என உயர்நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளது.

**பிறிதொரு பெயரில் முகப்பு புத்தக கணக்குகளைப் பாவிப்பது ஐந்து வருட கால சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். தனது சொந்த அடையாளத்தை வெளிப்படுத்துவதால் முரண்பாடற்ற வகையில் கருத்து தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு...**

சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணா?, முரணற்றதா, என்பதை மாத்திரமே நீதிமன்றம் ஆராயும் கொள்கை ரீதியில் நோக்காது. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பிரசாரங்களைத் தடுப்பதற்காகவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார்.

ஆனால், இந்த சட்டமூலத்தின் உண்மை நோக்கம் அதுவல்ல, தற்போதைய டிஜிட்டல் யுகத்துக்கு எதிரான அம்சங்களை உள்ளடக்கிய வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்துக்கு அப்பாற்பட்ட வகையில் நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாக்க மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இந்த சட்டமூலம் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.இந்த சட்டமூலம் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் பெரும்பாலான சரத்துக்கள் நாட்டு மக்களை அச்சமூட்டும் வகையில் உள்ளன. பிறிதொரு பெயரில் முகப்பு புத்தக கணக்குகளைப் பாவிப்பது ஐந்து வருட கால சிறைத்தண்டனைக்குரிய குற்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது சொந்த அடையாளத்தை வெளிப்படுத்துவதால் முரண்பாடற்ற வகையில் கருத்து தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு, இந்த உரிமை இந்த சட்டத்தில் மீறப்பட்டுள்ளது.



இலங்கையில் சேவையில் உள்ள சமூக ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக பாரிய நெருக்கடிகள் ஏற்படும். இதனால் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்துள்ளார்.

# இரு பேருந்துகள் மோதி விபத்து; 8 பேர் காயம்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை வீதியில் செவ்வாய்க்கிழமை (23) காலை இரு பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ். நகரை நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும், தனியார் பேருந்தும் மோதியே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் 8 பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# பயனாளிகளுக்கு மலசலக் கூடங்கள், குளியலறைகள் கையளிப்பு



■ டி.ஷங்கீதன்

ரோட்டறி கழகத்தின் அனுசரணையுடன் 109 மலசலக் கூடங்கள் மற்றும் 4 குளியலறைகள் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு, தலவாக்கலை - டிருப் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பு ரோட்டறி கழகம் சர்வதேச ரோட்டறி கழகமான அவுஸ்திரேலியா ஜெட்வுட் ரோஸ்வெலி மற்றும் டிக்கோயா ரேர்ட்டறி கழகம் ஆகியன இணைந்து 109 மலசலக் கூடங்கள் மற்றும் 4 குளியலறைகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு, டிருப் தோட்டத்தில் வெள்ளிக்கிழமை (19)இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அவுஸ்திரேலியா ரோட்டறி கழக உறுப்பினர் பீட்டர், முன்னாள் மாவட்ட ஆளுநர் அஜித், நீர்கொழும்பு ரோட்டறி கழக உறுப்பினர்கள். டீக்கோயா ரோட்டறி கழக உறுப்பினர்கள் பயனாளிகள் என அனைவரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இதற்கு செலவு செய்யப்பட்டுள்ள மொத்த தொகையானது இரண்டு கோடி ரூபாவாகும். இதற்கான நிதியை நீர்கொழும்பு ரோட்டறி கழகம் சர்வதேச ரோட்டறி கழகமான அவுஸ்திரேலியா ஜெட்வுட் ரோஸ்வெலி மற்றும் டிக்கோயா ரோட்டறி கழகம் கெட்ஜே நிதியம் ஆகியன வழங்கியிருந்தன.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பெருந்தோட்ட பகுதிகளில் சேவையாற்றுகின்ற குடும்ப நல உத்தியோகஸ்தர்களுக்கான 5 நாள் வதிவிட பயிற்சி நெறியும் ஹட்டனில் நடைபெற்றது. இதன்படி, முதல் 5 நாட்களுக்குச் சிங்கள மொழி மூலமும் அடுத்த 5 நாட்கள் தமிழ் மொழி மூலமாகவும் பயிற்சிகள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண மோசடியில் ஈடுபட்ட

# வங்கி ஊழியருக்கு நீதிமன்று உத்தரவு

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி பகுதியில் வங்கி ஊழியர் ஒருவரும் அவரது கணவரும் இணைந்து முதியவர் ஒருவரை ஏமாற்றி சுமார் ஆறு இலட்சம் ரூபாய் பணத்தினை பெற்று மோசடி செய்துள்ளதனர்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தனியார் வங்கி ஒன்றில் பணிபுரியும் வங்கி உத்தியோகத்தரும் அவரது கணவனும் இணைந்து முதியவர் ஒருவரிடம் மூன்று இலட்சத்து ஐம்பாயிரம் மற்றும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் என ஆறு இலட்சம் ரூபாய் பணத்தினை மோசடியாகப் பெற்று குறித்த முதியவரை ஏமாற்றி உள்ளத்துடன், அதற்கு பதிலாக மறுக்கப்பட்ட காசோலையினையும் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட முதியவரால் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் இருவருக்கும் எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளதுடன், இரண்டு பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நீதிமன்ற அனுமதியை கோரியுள்ளனர்.

குறித்த வங்கி ஊழியரும் அவரது கணவரும் ஏற்கெனவே பலரை ஏமாற்றி மோசடி குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 14 ஆயிரம் புதிய வீடுகளை நிர்மாணிக்க இந்தியா உறுதி

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கண்டிக்கான விஜயம் ஒன்றை கடந்த வியாழக்கிழமை (18) மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களான நல்லாசிகளைப் பெற்ற உயர்ஸ்தானிகர், இந்தியா இலங்கை மக்களுக்கு இடையிலான புராதன பிணைப்பின் மையப் பகுதியில் பௌத்தம் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இருதரப்பு பௌத்த உறவுகளை வலுப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் தொடர்பாகவும் மகாநாயக்க தேரர்களுக்கு உயர்ஸ்தானிகர் விவரித்துள்ளார்.

அதேபோல, இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நாடளாவிய ரீதியில் இருக்கும் ஆலயங்களை சூரியக்கல மின்சக்தி மூலம் இணைக்கும் திட்டத்தினை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இச்சந்தர்ப்பத்தில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, ஹந்தானை தோட்டப் பிரிவில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்திய வீடமைப்பு திட்டப் பணிகளையும் அவர் பார்வையிட்டுள்ளதுடன், இத்திட்டங்களின் கீழ் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இரண்டு கட்டங்களாக மொத்தம் 14 ஆயிரம் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்தியா உறுதி அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.





அத்துடன், பெருந்தோட்ட மக்களின் ஆரோக்கியத்தைக் கவனத்தில் கொண்டு ஆயுர்வேத முகாம் ஒன்றும் உயர்ஸ்தானிகரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன், அத்தோட்டத்தில் இருக்கும் மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களும் குடைகளும் அவரால் வழங்கப்பட்டிருந்தன. பெருந்தோட்ட தொழிலாளர்களின் குறிப்பாக இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் நல்வாழ்வினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருக்கும் இந்திய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு அமைவாகவே இவ்வாறான செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

# துப்பாக்கிச் சூட்டில் தேரர் மரணம்

கம்பஹா- மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றுக்கு காரில் வந்த இனந்தெரியாத நால்வர் செவ்வாய்க்கிழமை( 23) பிபகல் 12015 மணியளவில்) துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தேரர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சொகுசு காரில் வந்த இனந்தெரியாத 4 பேர், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் என கூறிக்கொண்டு, போதைப்பொருள் வைத்திருந்ததாக கிடைத்த தகவலையடுத்து சோதனையிட வந்ததாக தெரிவித்தனர்.

தேரரை சோதிப்பதாகக் கூறி இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ஒன்றியத்துக்கு சபாநாயகர் அனுமதி

இலங்கையின் மலையக தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்துக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (23) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின் போதே இந்த அறிவிப்பை விடுத்த சபாநாயகர் மேலும் கூறுகையில்,

வேலுகுமார் எம்.பி. மற்றும் 21 உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள எழுத்து மூலமான கோரிக்கையின் பேரில் "இலங்கையின் மலையக தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தை" (Caucus for the Evolution of Malaiyaga Plantation Community in Sri Lanka) தாபிப்பதற்காக 2024 ஜனவரி 12 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது என தெரிவித்துள்ளார்.



# மது ஒழிப்பில் இளம் தென்றல்

■ எம்.றொசாந்த்

சட்டவிரோத மதுபான ஒழிப்பு செயற்பாட்டில் யாழ்ப்பாணம் - காரைநகர் இளம் தென்றல் விளையாட்டு கழகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் அதன் பாவனையாளர்களும் அதிகரித்து வரும் நிலையில், அவற்றைத் தடுக்கும் நோக்குடன் இளம் தென்றல் விளையாட்டு கழக இளைஞர்கள் செயற்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையமொன்றை முற்றுகையிட்டு, உற்பத்தி பொருட்களுடன் ஒரு தொகை சட்ட விரோத மதுபானத்தையும் மீட்டுள்ளதுடன், சட்டவிரோத மதுபானத்தைக் கொள்வனவு செய்து அவற்றை எடுத்துச் சென்ற இருவரை மடக்கிப் பிடித்து அவர்களைக் கடுமையாக எச்சரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



மேலும் சட்டவிரோத மதுபான ஒழிப்பு செயற்பாட்டிற்கு காரைநகர் பிரதேச சபையால் இளம் தென்றல் விளையாட்டு கழகத்துக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக கடற்றொழிலாளர்கள் அறுவர் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் அறுவர், செவ்வாய்க்கிழமை (23) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்

கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த கடற்படையினர், இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து கடற்றொழில் ஈடுபட்டு இருந்த தமிழக கடற்றொழிலாளர்களை கைது செய்ததுடன், அவர்களின் இரண்டு படகுகளையும் கைப்பற்றியிருந்தனர்.



கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# "யுக்திய" நடவடிக்கையால் மனித உரிமைகள் மதிக்கப்படுமா?

பதில் பொலிஸ் மா அதிபர் பதவியேற்றதைத் தொடர்ந்து, அந்த பதவியைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் "யுக்திய" எனும் போதைப்பொருள் ஒழிப்பு பொலிஸ் நடவடிக்கையின் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமை தொடர்பில் செய்திகள் வெளியாகிய வண்ணமுள்ளன.

இந்த நடவடிக்கையில் ஓர் அப்பாவி உயிரும் கடந்த வாரம் நாரம்மல பகுதியில் வைத்துக் காவு கொள்ளப்பட்டிருந்தமை அனைவரும் அறிந்ததே. இந்த விடயம் மட்டுமன்றி, பல்வேறு சம்பவங்கள் குறித்த தகவல்கள் ஐக்கிய நாடுகள் சபை வரை கவனத்தை ஈர்த்துள்ளன.

போதை ஒழிப்பு தொடர்பில் முழுப் படையினரின் ஈடுபாட்டைப் பயன்படுத்தி பொது மக்களை அசௌகரியத்துக்கு உட்படுத்தி, போதைக்கு அடிமையானவர்களை மோசமாக நடத்தும் முறைமையைக் கைவிட்டு, சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கொள்கைகளைக் கைக்கொள்ளுமாறு அறிவுறுத்தி ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

போதைப்பொருள் பயன்படுத்துபவர்களைக் கைது செய்து அவர்களுக்குப் புனருத்தாரண செயற்பாடுகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் நிலையில், இந்தப் போதைப்பொருட்களை நாட்டினுள் கொண்டுவரும் தரப்பினர் தொடர்ந்தும் சட்டத்தின் பார்வையிலிருந்து தப்பித்து வருவது புருவமுயர்த்தச் செய்வதாக அமைந்துள்ளது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்கள் அடங்கலாகப் போதைப்பொருட்களை நாட்டினுள் கொண்டுவரும் சிலரின் பெயர்கள் பலர் மத்தியில் பரவலாகப் பேசப்படும் நிலையில், பதில் பொலிஸ் மா அதிபருக்கும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும் இவர்கள் பற்றிய எந்தத் தகவல்களுமே கிடைக்கவில்லையா என்பதும் வியக்க வைக்கின்றது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களும் மனிதர்களே. அவர்களுக்கும் மனித உரிமைகள் பொருந்தும். அவர்களும் கண்ணியமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியவர்கள் பாதுகாப்பு தரப்பினர். அவர்களுக்கு அளவுக்கு மீறிய அதிகாரத்தை வழங்கியது யார்? உயர் பதவிகளிலுள்ளவர்கள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகத்துக்குட்படுத்தும் போது, அவர்களைப் பின்பற்றி நடக்கும் கீழ் நிலை அதிகாரிகளும் அவ்வாறான நடத்தைக்குத் தூண்டப்படுகின்றனரா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. நீதிமன்றில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இவ்வாறு பொது மக்களை அசௌகரியத்துக்குட்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை மீளாய்வு செய்யப்பட வேண்டும். போதைப் பொருட்கள் வெறும் மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் மற்றும் பேருந்துகளில் மட்டும் தான் கொண்டு செல்லப்படுகின்றனவா? உயர் பெறுமதி வாய்ந்த நவீன ரக வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதில்லையா? அவ்வாறான வாகனங்கள் மாத்திரம் ஏன் சோதனைக்குப்படுத்தப்படுவதில்லை என்ற கேள்விகளும் இல்லாமல் இல்லை.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்ட வகையில் இந்த ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியமை முக்கியமானதாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்களால் அறிவுப்பூர்வமாகவும் சிந்தனை ஓட்டங்களாலும் விஸ்தரிக்கப்படும் எண்ணங்கள், இந்தப் பிரபஞ்சங்கள் முழுவதும் பதியப்படுகின்றன. பிரபஞ்சம் மகா பிரமாண்டமானது. இதனால் இந்த எண்ணங்களின் வலுவான சிந்தனைகள், அதேபோல் மேலும்பல பிரபஞ்சங்களின் சிந்தனைக் கற்றைகளுடன் இணைந்து கொள்கின்றன.

நல்ல விடயங்கள் வியாபித்திருக்கும்போது, சக்திமிகு மின்சாரம் போலவும் மின்காந்த அலைகளாகப் பிரபஞ்ச வலுவுடன் பயணிக்கின்றன. இது வெறும் கற்பனை அல்ல; கற்காத அநேகர் ஞானிகளாக, விற்பன்னர்களாக எங்ஙனம் உருவாகின்றார்கள் என்பதைச் சற்றே சிந்திப்பார்களாக!

மனிதர்களுக்குள்ளும் மாபெரும் காந்த சக்தி உண்டு. காதல் எப்படி வையகம் பூராவும் பரவுகின்றது. அன்பின் பரிமாணத்தை அளவிட முடியுமா?

நல்லனவற்றை எவன் தனது ஆன்ம சக்தியுடன் இணைந்து உருப்போடுகின்றானோ, அவன் அதன் வசமாகி விடுகின்றான். மெஞ்ஞானம், விஞ்ஞானம் எல்லாமே சிந்தனையின் வடிவங்கள்தான். இவை சூரியப்பிரகாசமானவை.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இரு துருவங்களுக்கு இடையில் நடந்த தேர்தல்

**முருகாநந்தன் தவம்**

இலங்கை தமிழரசுக் கட்சியின் 74 வருட வரலாற்றில் முதல் தடவையாக புதிய தலைவர் தெரிவுக்கான இரகசிய தேர்தல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு புதிய தலைவராக சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதில் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட ஸ்ரீதரன் 184 வாக்குகளையும் சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்ற அதேவேளை, யோகேஸ்வரன் ஸ்ரீதரனுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்ததனால் அவருக்கு வாக்குகள் அளிக்கப்படவில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்கான போட்டியில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் இருந்தால் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கட்சியின் யாப்பு கூறுகிறது என்றாலும், கட்சியின் 74 ஆண்டுகால வரலாற்றில் தலைவர் தெரிவுக்கான தேர்தல் நடந்ததில்லை. இதுவரையில் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் ஒருமித்த கருத்து மூலம் தலைவர் தெரிவுசெய்யப்பட்டு கட்சி மாநாட்டில் அணியினர் மற்றும் கோப்புகளின் ஒப்புதலைப் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் கட்சி பிளவுபடும் என்ற அச்சம் இருந்ததன் காரணமாகவே தேர்தல் நடத்தப்படுவதில்லை. அந்த வகையிலேயே இம்முறையும் தேர்தல் இன்றி தலைவரைத் தெரிவு செய்யக் கட்சி முயன்றபோதும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்ட எம்.பிக்களான ஸ்ரீதரன், சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பியான யோகேஸ்வரன் ஆகியோர் தேர்தலை விரும்பியதாலேயே இம்முறை வேண்டா வெறுப்பாக இரகசிய தேர்தல் நடத்தப்பட்டது.

திருகோணமலையிலுள்ள நகரசபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்வேறு குழறுபடிகளுக்கு மத்தியில் நடத்தப்பட்ட இரகசிய தேர்தல் வாக்கெடுப்பில் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட ஸ்ரீதரன் 184 வாக்குகளையும் சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்றுக்கொண்ட நிலையில், தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் ஸ்ரீதரன் அறிவிக்கப்பட்டுள்ளார். புதிய தலைவர் எதிர்வரும் 28ஆம் திகதி இடம்பெறும் கட்சியின் தேசிய மாநாட்டின் போது உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்பார் என இலங்கை தமிழரசு கட்சி செயலாளர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இம்முறை நடந்த தலைவர் தெரிவு "தமிழ்த் தேசியம்" என்ற கொள்கையைக்கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் தொடர்பிலான அச்சத்தையும் சந்தேகங்களையும் அதிகரிப்பதாகவே உள்ளது. கொள்கை, இலக்குகள், உணர்வுகளில் இரு துருவங்களாக உள்ள இரு வேட்பாளர்களுக்கிடையில் நடந்த போட்டியும் அவர்கள் பெற்ற வாக்குகளுமே இவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீதரனைப் பொறுத்தவரையில், அவர் விடுதலைப் போராட்டத்துடன் நெருங்கிய தொடர்புபட்டவர். விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டவர் தமிழ்த் தேசியக் கொள்கையில் மிகவும் பற்றுறுதி கொண்டவர். தமிழ்த் தேசியம் அழிந்து விடக்கூடாது, தமிழர் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும், தமிழர் உரிமைகள் கலை, கலாசாரம், பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஸ்ரீதரன் மிகவும் உறுதியான நிலைப்பாடு கொண்டவர். அதுமட்டுமன்றி, வன்னி யுத்தத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமை அப்பட்டமான உண்மை. வன்னியில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக சர்வதேச விசாரணை அவசியம், இனப்படுகாலையாளிகள் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்,போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி தீர்வாகாது என உரத்துக் குரலெழுப்பி வருபவர்.

> தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு ஆங்கில அறிவும் சட்ட அறிவும் தான் அவசியம் என்றால், தந்தை செல்வா, ஜீ.ஜீ, பொன்னம்பலம் காலத்திலேயே தமிழர்களுக்கு உரிமைகள் கிடைத்திருக்க வேண்டும்

அதேவேளை, சக போட்டியாளராக இருந்த சுமந்திரனைப் பொறுத்தவரை, அவர் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானவர். விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என பகிரங்கமாக அறிவித்தவர். தமிழ்த் தேசியக் கொள்கையில் பற்றுறுதி இல்லாதவர்.

அதுமட்டுமன்றி, தமிழர் தாயகத்தில் இனப்படுகொலை இடம்பெறவில்லை, யுத்தம் தொடர்பாகச் சர்வதேச விசாரணை முடிவடைந்து விட்டது. யுத்தக் குற்றம் தொடர்பாகப் படையினரை விசாரணைக்கு உட்படுத்தினால் புலிகளையும் விசாரிக்க வேண்டும், எக்கிய ராச்சிய என்பது ஒற்றை ஆட்சி அல்ல என பகிரங்கமாகவே தனது கருத்துக்களை அழுத்தி உரைப்பவர்.

இவ்வாறான இரு துருவங்களுக்கு இடையில் நடந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கான போட்டியில்தான் ஸ்ரீதரன் வெற்றிபெற்றுள்ளார். அதாவது தமிழ்த் தேசியம் வெற்றி பெற்றுள்ளது. ஸ்ரீதரனின் இந்த வெற்றியின் பின்னால் அடுத்த போட்டியாளரான மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பியான யோகேஸ்வரன் தான் உள்ளார். அவர் பொது வெளியில் தூக்கிப்போட்ட "சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் தலைவரானால் தமிழ்த் தேசியம் அழிக்கப்படும்" என்ற குண்டே சுமந்திரனின் தலைவர் பதவி ஆசையைத் தகர்த்தது.

தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட ஸ்ரீதரனும் சுமந்திரனும் பொது வெளியில் ஒருவரை ஒருவர் விமர்சித்து பிரசாரம் செய்யவில்லை. கருத்துக்களை முன்வைக்கவில்லை. நாகரீகமாகவே இருவரும் நடந்து கொண்டனர்.

ஆனால், சுமந்திரனின் வலது கரமான மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா. சாணக்கியன் தான் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு ஆங்கில அறிவும் சட்ட அறிவும் சர்வதேச தொடர்பும் அவசியம் என்று ஸ்ரீதரனுக்கு எதிரான கருத்தை முன்வைத்திருந்தார்.

இதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு ஆங்கில அறிவும் சட்ட அறிவும் தான் அவசியம் என்றால், தந்தை செல்வா, ஜீ.ஜீ, பொன்னம்பலம் காலத்திலேயே தமிழர்களுக்கு உரிமைகள் கிடைத்திருக்க வேண்டும் என்ற பதிலடியை ஸ்ரீதரன் வழங்கிய நிலையில், அதன் பின்னர் இரு தரப்புமே அமைதி காத்தன.

இந்நிலையிலேயே தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டியில் களமிறங்கிய மூன்றாவது வேட்பாளரான யோகேஸ்வரன் தனது ஆதரவு ஸ்ரீதரனுக்கே என யாழ்ப்பாணத்தில் ஊடக மாநாட்டை நடத்தி அறிவித்ததுடன், தமிழரசுக் கட்சியின் தலைவராக சுமந்திரன் தெரிவானால் தமிழ்த் தேசியம் அழிக்கப்படும் என்ற பகிரங்க எச்சரிக்கையையும் விடுத்தார். அந்த எச்சரிக்கையே ஸ்ரீதரனின் வெற்றியை உறுதிப்படுத்தியது.

ஆனால், ஸ்ரீதரனின் வெற்றி மூலம் தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்படுமா என்பதும் சந்தேகம்தான். ஏனெனில், விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான, விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என பகிரங்கமாக அறிவித்த, தமிழ்த் தேசியக் கொள்கையில் பற்றுறுதி இல்லாத, தமிழர் தாயகத்தில் இனப்படுகொலை இடம்பெறவில்லை, யுத்தம் தொடர்பாக சர்வதேச விசாரணை முடிவடைந்துவிட்டது. யுத்தக் குற்றம் தொடர்பாகப் படையினரை விசாரணைக்கு உட்படுத்தினால் புலிகளையும் விசாரிக்க வேண்டும், எக்கிய ராச்சிய என்பது ஒற்றை ஆட்சி அல்ல என பகிரங்கமாகவே தனது கருத்துக்களை அழுத்தி உரைத்த சுமந்திரனின் கொள்கையை ஏற்றுக்கொண்ட, அவருக்கு ஆதரவளிக்கும் 137 பேர் இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்தியக் குழுவிலும் பொதுச்சபையிலும் இருக்கின்றனர்.

இது தமிழரசுக்கட்சியினதும் ஸ்ரீதரனினதும் தமிழ்த் தேசியக் கொள்கைக்கு பெரும் சவாலாகவே எதிர்காலத்தில் அமையும்.

## கடிதங்கள்

### குண்டும் குழியுமான வீதியால் மக்கள் அசௌகரியம்

மஸ்கெலியா நகரிலிருந்து காட்மோர் செல்லும் பிரதான வீதியில் டீசைட் சந்தியிலிருந்து காட்மோர் வரையான 06 கிலோமீற்றர் பகுதியில் சுமார் 4 கிலோமீற்றர் தூரம் பல வருடங்களாக மிகவும் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் தோட்டத் தொழிலாளர், பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் வாகன சாரதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மத்திய மாகாண நெடுஞ்சாலைத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்த வீதியில், இலங்கை போக்குவரத்து சபை பேருந்து ஒன்றுடன் 6 தனியார் பேருந்துகள் நாளாந்தம் இயங்குகின்றன. காட்மோர், ஃபோக்மோர், மொக்கா மற்றும் டீசைட் ஆகிய பிரதான 4 தேயிலைத் தோட்டங்களில் உள்ள 12 பிரிவில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் கிட்டத்தட்ட 6,000 மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த வீதி வழங்கப்பட்டுள்ளது.

காட்மோர் பிரதேசத்திலிருந்து மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலை வரை இந்த பாழடைந்த வீதியின் ஊடாக கர்ப்பிணிப் பெண்களும் ஆபத்தான நோயாளர்களும் மிகவும் துரதிர்ஷ்டவசமாக உயிரிழக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகப் பிரதேச சாரதிகளும் தோட்டத் தொழிலாளர் சமூகமும் தெரிவிக்கின்றனர்.

செ.தி.பெருமாள்



நிகழ்நிலை காப்புச் சட்டம்:

# ஊடகத்துறைக்கான ஆபத்துக்கள்...



முன்மொழியப்பட்டுள்ள நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம், முன்வரைவு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன. இலங்கை அரசாங்கம் இரவோடு இரவாக சட்டமூலங்களை உருவாக்கி பாராளுமன்றப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடு சட்டமாக்குவதும் அதன் பின்னர் நாட்டில் வாழும் மக்களின் உரிமைகளையும், இந்நாட்டினுடைய ஜனநாயக விழுமியங்களையும் அடியோடு வேரறுக்கின்ற செயல்பாடுகள் காலங்காலமாக அரங்கேற்றப்பட்டுக் கொண்டே வருகின்றன.

இதற்கு எடுத்துக் காட்டாக தற்போது முன்மொழியப்பட்டுள்ள நிகழ்நிலைப் பாதுகாப்பு தடைச்சட்டத்தைக் கூறலாம். இவ்வாறான சட்டம் இந்நாட்டில் வாழும் சிவில் சமூகங்களைக் குறிவைப்பதோடு அவர்களின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் ஆகியவற்றை இல்லாது செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றமை அறிந்த யதார்த்தமாகும்.

அந்த வகையில், தற்போது வரைபு செய்யப்பட்டுள்ள நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமானது அமுலுக்கு வருமானால் எதிர்காலங்களில் குடிமக்கள் சுதந்திரமாகத் தகவல்களைப் பெறுவதற்கும், அணுகுவதற்கும், கையாள்வதற்கும், கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் பாரியதொரு அச்சுறுத்தலாக இருக்கும்.

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் என்றால் என்ன?

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2023 ஒக்டோபர் 3ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இச்சட்ட மூலமானது குறிப்பிட்ட நோக்கங்களுடன் 'நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழு' ஒன்றை நிறுவ வேண்டும் என்று கூறுகிறது.

இவ்நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தின்படி, ஒரு நபர் நிகழ்நிலையில் பதிவிடுவதை அல்லது பகிர்வதைக் குற்றமாக்க முடிவதுடன் இது 20 ஆண்டுகள் வரை தண்டனைத் தடைகளை விதிக்கும்.

## இந்தச் சட்டமூலத்தால் குடிமக்கள் நேரடியாக எதிர்கொள்ளவுள்ள சவால்கள்...

நியாயமற்ற தன்னிச்சையான அல்லது தற்காலிகமான முறையில் செயல்படுத்தக்கூடிய அதிகப்படியான மற்றும் தெளிவற்ற குற்றங்களை இந்த சட்டமூலம் உருவாக்குகிறது.

ஒப்புதலுக்கு உட்பட்டு தன்னிச்சையான அடிப்படையில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நீக்கக்கூடிய ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்படும் ஆணைக்குழுவுக்குத் தெளிவற்ற வரையறுக்கப்பட்ட, பரந்த அதிகாரங்களை இந்த சட்டமூலம் வழங்குகிறது.

இந்த சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது மற்றும் சட்டமாக்க முடியாது என்ற அடிப்படையில் சட்டமூலத்தின் அரசியலமைப்புத்தன்மை சவாலுக்கு உட்படுத்தக் கூடியது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவிக்கிறது.

இந்த சட்டமூலம் அமைச்சரால் நிபுணர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட பிரஜைகளுக்குப் பரந்த மற்றும் அதிகப்படியான தேடல் மற்றும் பறிமுதல் அதிகாரங்களை வழங்குகிறது.

அவை தன்னிச்சையானவை மற்றும் கணிக்கமுடியாதவை. அரசியலமைப்பின் 14(1) (a), (b) (c), (e), (f) மற்றும் (g) மற்றும் உறுப்புரை 10 ஆகியவற்றால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை போன்ற அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதை இந்த சட்டமூலம் சட்டவிரோதமாகக் கட்டுப்படுத்தி முடக்குகிறது.

## 'நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழு' என்றால் என்ன?

நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழுவானது, அரசியலமைப்பு பேரவையின் அனுமதிக்கு உட்பட்டு இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

இந்த உறுப்பினர்கள் தகவல், தொழில்நுட்பம், சட்டம், ஆளுகை, சமூக சேவைகள், பத்திரிகைத்துறை, அறிவியல், தொழில்நுட்பம் அல்லது முகாமைத்துவம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு துறையில் தகுதி மற்றும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஆணைக்குழுவானது கீழ்க்கண்ட விரிவான அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

தேசியப் பாதுகாப்பு, பொது சுதந்திரம் அல்லது பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அல்லது தீய எண்ணம் மற்றும் விரோத உணர்வுகளை ஊக்குவிக்கும் தவறான அறிக்கைகளைத் தடை செய்கிறது.

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் பட்டியலிடப்பட்டுள்ள முக்கிய குற்றங்கள் யாவை?

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலமானது பலவிதமான குற்றங்களுக்கு வழிவகுக்கிறது. இவற்றுக்கு சிறைத்தண்டனை மற்றும்ஃஅல்லது அபராதம் உள்ளிட்ட பல்வேறு தண்டனைகள் உள்ளன.

தேசியப் பாதுகாப்பு, பொது சுதந்திரம் அல்லது பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அல்லது "தீய எண்ணம் மற்றும் விரோத உணர்வுகளை ஊக்குவிக்கும்" தவறான அறிக்கைகளைத் தடை செய்கிறது. கருத்துச் சுதந்திரத்தை மீறும் வகையில், எதிர்மறையான கருத்துகளை வெளியிடுமாறு தனிநபர்கள், சேவை வழங்குநர்கள் அல்லது இணைய இடைத்தரகர்களுக்கு ஆணைக்குழு உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

நீதிமன்ற உத்தரவு இல்லாமல் உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான அறிவிப்புகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கான ஆணைக்குழுவின் அதிகாரம் அரசியலமைப்பு உரிமைகளை மீறக்கூடும், இது சேவை வழங்குநர்கள் மற்றும் இறுதி பயனர்களைப் பாதிக்கும்.

சேவை வழங்குநர்களுக்கான பரிந்துரைகள், ஆணைக்குழுவின் வலைத்தள பதிவு அதிகாரத்துடன் இணைந்து, இணக்கத்தின் மீது தேவையற்ற அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும், இது சுதந்திரமாக நடவடிக்கைகளை நடத்துவதற்கான உரிமையை மீறக்கூடும்..

நீதிமன்ற உத்தரவு இல்லாமல் அணுகலை முடக்குவதற்கான பரிந்துரைகள் அரசியலமைப்பு உரிமைகளை மீறக்கூடும், ஏனெனில் இது சரியான சட்ட ஆய்வு இல்லாமல் தகவல் பரவலைக் கண்காணிக்க அனுமதிக்கிறது.

வழிகாட்டுதல்கள் இல்லாமல் விதிகளை உருவாக்கும் அதிகாரம் (11(j) 12(1) தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் குறிப்பிட்ட அளவுகோல்கள் இல்லாமல் ஆணைக்குழுவின் விதிகளை உருவாக்கும் அதிகாரம் சமத்துவத்திற்கான உரிமையை மீறுகிறது, இது சட்டத்தின் கீழ் வெளிப்படைத்தன்மை மற்றும் சமமான பாதுகாப்பு குறித்த கவலைகளை எழுப்புகிறது.

ஐக்கிய இராச்சியம் போன்ற நியாயாதிக்கங்களில் காணப்படும் இணையம் தொடர்பான சட்டங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் தெளிவான வரையறைகள், கருத்துச் சுதந்திரத்திற்கான வலுவான பாதுகாப்புக்கள் மற்றும் விரிவான சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்குவதில் பின்தங்கியுள்ளது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குவிந்திருப்பதாலும், நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு சுயாதீனமின்மை காரணமாகவும் கவலைகள் எழுகின்றன.

இலங்கை நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் தெளிவு, சுதந்திரம் மற்றும் வினைத்திறன் மிக்க ஒழுங்குமுறை என்பன கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்த வேறுபாடுகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத்துறை அடக்குமுறைக்குள்ளாகுமானால் அது ஒட்டுமொத்தமாக நாட்டின் அரசியல், ஆட்சி, பொருளாதாரம், வாழ்வியல் ஒழுங்குமுறை அனைத்தையும் பாதிப்பதோடு நாட்டை அதலபாதாளத்திற்கு இட்டுச் செல்லும் என்பதே யதார்த்தம். நாட்டில் ஒரு "கொடுங்கோன்மை" ஆட்சி நடைபெற்றால் அதனை மாற்றுவதற்கான எந்தவொரு சமூக எழுச்சியையும் மேற்கொள்வதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

குறிப்பாக இளையோர் சமுதாயம் அவர்களது ஆக்கப்பூர்வமான எந்தவொரு சிந்தனையையும் வெளிப்படுத்த முடியாத நிலைமையில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக மூளைச் சலவை செய்யப்பட்டவர்களாக இருப்பர். ஒட்டுமொத்தத்தில் கூறப்போனால் , ஒருவர் சிந்திக்கவோ செயற்படவோ முடியாதவாறு நவீனத்துவ அடிமையாக இருக்கும் நிலை உருவாகும்.





## தைப்பொங்கல் விழா...

சப்ரகமுவ மாகாண தைப்பொங்கல் விழா சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க தலைமையில் தெரணியாகலை ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை(19) இடம்பெற்றது. இந்நிகழ்வில், இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ்.அதிரா கலந்துகொண்டார். தெரணியாகலை பிரதேச மலையக மக்களுக்கு உலலுணவு பொருட்கள் மற்றும் சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அகராதி மற்றும் நூல்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் தெரணியாகலை ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ இராதா சிவகுமார் குருக்கள், சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராச்சி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

– சிவா ஸ்ரீதரராவ்









## முல்லைத்தீவில் கருத்தரங்கு...

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கான கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை (21) சிறப்பாக இடம்பெற்றது

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அறிவு நதி தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்களில் ஒன்றாக இளைஞர்களுக்கான இந்த கருத்தரங்கு இடம்பெற்றது இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்த கருத்தரங்கில் ஊடகத்துறை மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு தொடர்பான கருத்தரங்காக இது இடம்பெற்றது

குறித்த கருத்தரங்கில் விரிவுரையாளர்களாக ராம் குமார் [assistant news editor of verakesari], சுபாசினி [business psychology] ஆகியோர் கலந்து கொண்டனர்.

– சண்முகம் தவசீலன்















## நூல்கள் வழங்கி வைப்பு...

ஏறாவூர் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட விபுலானந்தா பொது நூலகத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே முரளிதரன், பெறுமதியான நூல்களை வழங்கி வைத்தார். சித்தாண்டியில் அமைந்துள்ள விபுலானந்தா பொது நூலகத்திற்கு தேசிய மொழிகள் பிரிவின் நிதி ஒதுக்கிட்டின் கீழ் ஒரு இலட்சம் பெறுமதியான நூல்கள் திங்கட்கிழமை (22) மாவட்ட செயலகத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

– எம்.எஸ்.எம்.நூர்தீன்

## நிறைவுபெற்றது...

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் கல்லடி டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் 44ஆவது வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை (19) திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஞாயிற்றுக்கிழமை (21) கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றுள்ளது.

– எம்.எஸ்.எம்.நூர்தீன்











# பட்டர் சிக்கனால் குடுமிப்பிடி சண்டை



பட்டர் சிக்கன், டால் மக்கானி ஆகிய உணவுப் பொருட்களை முதன்முதலில் தயாரித்தவர் யார் என்ற பிரச்சினையில் புதுடெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மோதி மஹால் ரெஸ்டாரெண்ட் மற்றும் தார்யாகஞ்ச் ரெஸ்டாரெண்ட் உரிமையாளர்களே வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

மறைந்த செப் குந்தன் லால் குஜ்ராலின் முன்னோர்கள் தான் இரு உணவுப் பொருட்களையும் கண்டுபிடித்தவர்கள் என்று மோடி மஹால் ரெஸ்டாரெண்ட் உரிமையாளர் தனது தரப்பில் குறிப்பிட்டுள்ளார்.

1950களில் இருந்து இன்று வரை பட்டர் சிக்கன், டால் மக்கானியைக் கண்டுபிடித்தவர்கள் என்ற வாசகத்துடன் தான் தங்களது அடையாளம் முன்வைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

ஆனால், தங்களது பெயரின் பெருமையையும், நல்லெண்ணத்தையும் மக்களிடையே உள்ள ஆதரவையும் களவாடும் வகையில் தார்யாகஞ்ச் ரெஸ்டாரெண்ட் உரிமையாளர்கள் முயற்சிக்கின்றனர் என்றும் அவர்களது முன்னோரான மறைந்த குந்தன் லால் ஜக்கிதான் பட்டர் சிக்கனையும் டால் மக்கானியையும் கண்டுபிடித்ததாகக் கூறுகின்றனர் என்றும் மோடி மஹால் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

மோடி மஹால் உரிமையாளர்களின் சட்டத்தரணி சந்தீப் சேதி உயர் நீதிமன்றத்தில் வாதிடுகையில், 1920ஆம் ஆண்டில் இருந்து உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பல ரெஸ்டாரெண்ட்களை நடத்தி வரும் மோடி மஹால், அந்தப் பெயரையே டிரேட் மார்க்காகக் கொண்டுள்ளது. ஆனால், தார்யாகஞ்ச் ரெஸ்டாரெண்ட் உரிமையாளர்கள் மக்களை திசை திருப்புகின்றனர். தார்யாகஞ்சில் முதல் ரெஸ்டாரெண்டை தொடங்கிய மோதி மஹாலுடன் தார்யாகஞ்சுக்குத் தொடர்பு இருப்பதுபோல தகவல் பரப்புகின்றனர்.

மோடி மஹால் உரிமையாளரின் முன்னோரான குந்தன் லால் குஜ்ராலின் படத்தை பேஸ்புக்கில் தங்களது முன்னோர் குந்தன் லால் ஜக்கிதான் அது என்று தவறாக தார்யாகஞ்ச் உரிமையாளர்கள் சித்திரிக்கின்றனர். பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள மோதி மஹால் ரெஸ்டாரெண்டை தங்களது வெப்சைட்டில் அவர்கள் பதிவிட்டுள்ளனர் என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி சஞ்சீவ் நருலா தார்யாகஞ்ச் ரெஸ்டாரெண்ட் உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார். மார்ச் 18ஆம் திதியன்று இணை பதிவாளர் முன் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

## அயோத்தி: ராமர் கோயிலை வட்டமிட்ட கருடன்




கடவுள் விஷ்ணுவின் வாகனம் கருடன் என இந்து புராணங்கள் கூறுகின்றன. விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றான ராமருக்காக அயோத்தியில் கட்டப்பட்டுள்ள கோயில் திறப்பு விழா திங்கட்கிழமை (22) நடைபெற்றது. அப்போது கோயிலின் மேல் பகுதியில் கருடன் வட்டமிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்மூலம் கடவுளின் ஆசி கிடைத்திருக்கிறது என்று பக்தர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடவுள் ராமர் அங்குதான் இருக்கிறார் என்பதற்கான அறிகுறி இது என்றும் நம்பப்படுகிறது.

பக்தி மற்றும் ஆன்மிக உணர்வால் வளிமண்டலம் சூழ்ந்துள்ளதால், இது நல்ல அதிர்ஷ்டத்தின் அறிகுறியாகவும், கோயிலின் எதிர்காலத்துக்கான நேர்மறையான சகுனமாகவும் இருக்கிறது என கருதப்படுகிறது.

## சென்னை: 7 டிகிரி குளிர்



நீலகிரி மாவட்டம் உதகையில் 7 டிகிரி குளிர் பதிவாகியுள்ளது. தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்குசுழற்சி நிலவுகிறது. இருப்பினும் தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பில்லை. வறண்ட வானிலை நிலவக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 2,800 ஊழியர்கள் கண்ணீர்

இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் குழுமமாக விளங்கும் டாடா குரூப் இந்தியாவைத் தாண்டி உலகில் பல நாடுகளில், பல வர்த்தகங்களைச் செய்து வருகிறது. இப்படிப் பிரிட்டனில், டாடா ஸ்டீல் மிகப்பெரிய உற்பத்தி கட்டமைப்பைப் பல இடங்களில் தனித்தனியாகப் பிரித்து வைத்து இயங்கி வருகிறது.

இதன் படி 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் பிரிட்டன் நாட்டில் வேல்ஸ் (Wales) பகுதியில் உள்ள போர்ட் டால்போட் ஸ்டீல் வொர்க்ஸ் தொழிற்சாலையில் உள்ள இரண்டு பிளாஸ்ட் பர்னேஸ்களை மூடப்போவதாக டாடா ஸ்டீல் வெள்ளிக்கிழமை (19) அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

டாடா குழுமத்தின் இந்த முடிவின் காரணமாக இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றி வந்த 2,800 பேர் தங்களுடைய வேலையை இழக்க உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



## காத்மாண்டு: இந்தியா–நேபாளம் இடையிலான கலாசார இணைப்பில் ராமரும், சீதையும் அடையாளம்

### நேபாள அமைச்சர் என்.பி.சவூத்

உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தில் கட்டப்பட்டுள்ள ராமர் கோவில் பிரதிஷ்டை விழா திங்கட்கிழமை (22) கோலாகலமாக நடைபெற்றது.

இந்த ராமர் கோவில் கும்பாபிஷேக விழாவுக்கு, நேபாள நாட்டில் உள்ள சீதை பிறந்த இடமாக நம்பப்படும் ஜானக்பூரில் இருந்து சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பரிசுப்பொருட்கள் அயோத்திக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ராமர் கோவில் பிரதிஷ்டை விழாவை முன்னிட்டு, நேபாளத்தில் உள்ள கோயில்களில் தீபங்கள் ஏற்றப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ராமரும், சீதையும் இந்தியா-நேபாளம் இடையிலான கலாசார இணைப்பின் அடையாளம் என நேபாளத்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் என்.பி.சவூத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “ஜெய் ஸ்ரீ ராம்! பிரதமர் மோடி தலைமையில் டைபெற்ற அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழா மற்றும் பிரதிஷ்டை விழா, சனாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் பெருமையான தருணமாகும் என குறிப்பிட்டுள்ளார்.





### இத்தாலிய சுப்பர் கிண்ணத் தொடர்:

# சம்பியனானது இன்டர் மிலன்

இத்தாலிய சுப்பர் கிண்ணத் தொடரில் இன்டர் மிலன் சம்பியனானது.

நேற்று அதிகாலை நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நாப்போலியை வென்றே மிலன் சம்பியனானது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்டினெஸ் பெற்றிருந்தார்.



### இங்கிலாந்தின் வேகம்

# “விக்கெட்டுகளை வழங்கும்”


இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் போட்டிகளின்போது இங்கிலாந்து வேகமாகத் துடுப்பெடுத்தாடினால் தன்னை அவர்கள் களைக்க வைக்க மாட்டார்கள் எனத் தெரிவித்த ஜஸ்பிரிட் பும்ரா, அவ்வாறாயின் தான் வகை தொகையாக விக்கெட்டுகளை கைப்பற்றுவேன் எனக் கூறியுள்ளார்.

தவிர இவ்வாறான அணுகுமுறை காரணமாக தன்னைப் போன்ற பந்துவீச்சாளர்கள் போட்டியின் அனைத்துக் கணங்களிலும் விக்கெட்டுகளைக் கைப்பற்றக் கூடியவர்களாக இருப்பர் என பும்ரா மேலும் தெரிவித்துள்ளார்.

### முதலிரண்டு போட்டிகளிலிருந்தும்

# விலகினார் கோலி





இங்கிலாந்துக்கெதிரான இந்தியாவின் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலிருந்தும் தனிப்பட்ட காரணங்கள் காரணமாக விராட் கோலி விலகியுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை திங்கட்கிழமை (22) தெரிவித்துள்ளது.

கோலிக்கான பிரதியீடொன்று விரைவில் அறிவிக்கப்படுமெனச் சபை கூறியுள்ள நிலையில், செட்டேஸ்வர் புஜாரா, ரஜாட் பட்டிடார், ஃஸ்ப்ராஸ் கான், அபிமன்யு ஈஸ்வரன் ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் அணியில் கோலியை விக்கெட் காப்பாளர் கே.எஸ்.பாரத் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



### இங்கிலாந்துக்கெதிராக

# ‘லோகேஷ் ராகுல் ஈடுபடமாட்டார்’

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரின்போது லோகேஷ் ராகுல் விக்கெட் காப்பில் ஈடுபட மாட்டாரென இந்தியாவின் பயிற்றுவிப்பாளர் ராகுல் ட்ராவிட் உறுதிப்படுத்தியுள்ளார்.

கே.எஸ். பாரத் அல்லது துருவ் ஜுரெல் விக்கெட் காப்பில் ஈடுபடவுள்ளனர்.

இறுதியாக இந்தியா விளையாடிய தென்னாபிரிக்காவுக்கெதிரான தொடரில் ராகுலே விக்கெட் காப்பில் ஈடுபட்டிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 24 ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.